**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

**OS. No. 121/2023 நாள் 09.09.2024**

**PW – 1 உமாராணி க/பெ.ரவிச்சந்திரன்**

**குறுக்கு விசாரணை தொடர்சி**

நான் தனியார் மருத்துவமனையில் staff Nurse ஆக பணிபுரிந்து வருகிறேன். வழக்கிடை சொத்தை எனது தகப்பனார் 1979ம் வருடம் வாங்கினார். எனது அப்பா 1998ல் இறந்துபோனார். எனது தகப்பனார் இறந்தபிறகு நான்கு சகோதரிகள் மற்றும் கேசவனுடன் பாலச்சந்தருக்கு பிரச்சனை. எனது சகோதரர் கேசவன் மற்றும் இந்த வழக்கின் 1 முதல் 4 வாதிகள் இணைந்து தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் அசல்வழக்குஎண்.92/99 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கின் தீர்ப்பு 11.7.2001ல் வந்தபிறகு நாங்கள் சகோதரிகள் கேசவனுக்கு விடுதலை பதிரம் எழுதிக்கொடுத்தோம். அசல்வழக்கு 92/99ன்தீர்ப்புரை இந்த வழக்கில் ஏற்கனவே வாசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது சகோதரர் கேசவன் இடைநிலை மனுஎண்.58/2006 ல் அவாஎண்.92/99ல் இறுதி நிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இறுதி நிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்வதற்கு முன்பே நாங்கள் சகோதரிகள் கேசவனுக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தால் இடைநிலை மனு 58/2006கோசவன் மட்டும் தாக்கல் செய்தார். 8.10.2001ல் இந்த வழக்கின் முதல் வாதி மற்றும் 3ம் வாதி இருவரும் சேர்ந்து கேசவனுக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் வாசாஆ-6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் 5.11.2003ல் இறந்த கேசவனுக்கு எனக்குரிய பாகத்தை விடுதலை செய்துகொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் அசல் வாசஆ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 26.12.2008ல் கேசவனுக்கு 4ம் வாதி வசந்தகுமாரி தனக்குரிய பாகத்தை விடுதலை செய்து எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் வாசஆ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் வாதிகள் அனைவரும் கேசவனிடம் எங்களுக்குரிய பாகத்திற்கான பணத்தை பெற்றுக்கொண்டு எங்கள் பாகவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். அதற்குபிறகு கேசவன் பெயரில் எங்கள் 4 பங்கு மற்றும் அவருக்குரிய ஒரு பங்கு சேர்த்து 5/6 பாகம் இறுதிநிலை தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தீர்ப்பு வாசாஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது சகோதரர் கேசவன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். அசல்வழக்கு எண்.92/1999ல் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்படுவதற்குள் எனது தாயார் ராஜம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எந்த வருடம் என்று தற்போது ஞாபகம் இல்லை. கேசவன் மெக்கானிக்காகவும் எல்க்ட்டிரீசியனாகவும் பணிபுரிந்தார். கேசவன் சாலை விபத்தில் இறந்தார். கேசவனுக்கு சீனிவாசபுரம் 2வது தெருவில் 3வது கிராசில் விபத்து ஏற்பட்டது. கேசவன் ரோட்டில் அடிபட்டு கிடந்ததை மக்கள் பார்த்து 108 மூலம் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். 14.2.2020ம் தேதி கேசவனுக்கு விபத்து ஏற்பட்டதாக எனது தங்கை 3ம் வாதி பார்வதி சொன்னார். பிறகு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சென்று பார்த்தேன். நான் போகும் போது பிரதிவாதியின்

மனைவி சித்ரா இருந்தார். பாலச்சந்தர் எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது. அந்த நேரத்தில் பாலச்சந்தர் இரத்தப்பரிசோதனை செய்ய சென்றார் என்றால் எனக்கு தெரியாது. 14ம் தேதி அடிபட்டு கேசவன் 18ம் தேதி இறந்தார். கேசவனுக்கு இறுதிச்சடங்கு செய்தவர் பாலச்சந்தார் என்றால் சரிதான். போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விலாசங்களில் நாங்கள் எங்கள் குடும்பத்துடன் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கிடை சொத்தில் நாங்கள் யாரும் குடியிருக்கவில்லை. கேசவன் இறந்தபிறகு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எவ்வாறு கிடைத்தது என்றால் எனது சகோதரர் 2020ம் வருடம் ஜனவரி முதல் வாரத்தில் சொத்தின் அசல் பத்திரங்களை என்னிடம் கொடுத்துவிட்டு தொகை ரூ.2,00,000/-பெற்றுக்கொண்டார். வழக்கிடை சொத்தை விற்றுதான் பணத்தை தருவதாக சொல்லி தான் பணத்தை வாங்கினார். மேற்சொன்ன விபரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆரம்பத்தில் இருந்தே வழக்கு சொத்திற்காக பிரச்சனை செய்வது நான் தான் என்றும் அதனால் கேசவன் பத்திரத்தை என்னிடம் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பத்திரங்கள் அனைத்தையும் எனது சகோதரர் அவரது வீட்டு பீரோவில் வைத்திருந்தார் என்றும் அவர் இறந்ததும் அவரது பீரோவில் இருந்த ஆவணங்கள் மற்றும் நகைகளை நான் எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் பொய். வழக்கு போடுவதற்கு முன்பு கேசவன் இறந்த அன்றே சொத்தை பற்றி பேசினோமா என்றால் இல்லை. எனது சகோதரி முதல் வாதி ஜெயலெட்சுமியால் உடல்நலம் சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்ல இயலாது. அவர் தற்போது ஆர்.ஆர் நகர், புது பஸ்டாண்ட், தஞ்சாவூரில் உள்ளார். தஞ்சாவூர் செல்லியம்மன்கோவில் தெருவில் முதல் வாதி குடியிருப்பதாக பிராதில் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் அப்போது குடும்ப அட்டையில் இருந்த விலாசத்தை போட்டேன். என்னிடம் காட்டப்பட்டுள்ள பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. முதல் வாதியின் கையெழுத்து பிராதில் D.ஜெயலெட்சுமி என்று போடப்பட்டுள்ளது. முதல் வாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் விடுதல் பத்திரம் வாசாஆ.6ல் அவர் பெயர் P.ஜெயலெட்சுமி என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயலெட்சுமி, பார்வதி, வசந்தகுமாரி, பாலச்சந்திரன் ஆகியோர் சேர்ந்து வாரிசுசான்றிதழ் கோரி எனக்கும் அரசுக்கும் எதிராக அசல்வழக்கு எண்.166/2021 தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த பிராதில் போடப்பட்டுள்ள கையெழுத்து P.ஜெயலெட்சுமி என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் பிவாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணம் ஏற்கனவே வாசாஆ- 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண்.166/2021 வழக்கில் என்னிடம் காட்டப்படும் எதிருரையில் உள்ள கையெபத்து என்னுடையது தான். அந்த எதிருரை வாசாஆ-13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதாக என்றால் ஞாபகம் இல்லை. அந்த வழக்கை பாலச்சந்தர் நாங்கள் ஏற்கனவே எங்கள் பாகத்தை வாங்கிக்கொண்டதால் வாரிசு சான்றிதழ் தான் தனியாக பெற்றுக்கொள்வதாக கூறி நீதிமன்றத்தின் அனுமதியுடன் வழக்கை திரும்பி வாங்கிவிட்டார்

என்றால் தெரியாது. பாலச்சந்தர் வாரிசுசான்றிதழ் கோரி தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.123/2023 என்ற வழக்கை தனியாக தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. ஜெயலெட்சுமி என்பவர் P.ஜெயலெட்சுமி என்று தான் கையெழுத்து போடுவார் என்றும் D.ஜெயலெட்சுமி என்று போட்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் 3வதாக கையெழுத்து போட்டு பார்வதி என்பவரின் கையெழுத்து அவர்களுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.8ல் 4வது பிரதிவாதி வசந்தகுமாரியின் கையெழுத்து அல்ல. என்னிடம் காட்டப்படும் பிராதில் வசந்தகுமாரியின் கையெழுத்தில் சிறு வித்தியாசம் தெரிகிறது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது சகோதரிகள் யாருமே உடன்படவில்லை நானாக அவர்களது கையெழுத்தை போட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. சாட்சி சொல்ல அவர்களை அழைத்துவர தயார். வாதிகளாகிய நாங்கள் 4 பேரும் எங்கள் பாகத்தை ஏற்கனவேபெற்றுக்கொண்டுவிட்டோம் என்றும் நாங்கள் திருமணமாகி கணவன் வீட்டில் குடியிருக்கிறோம் என்றும் ஏற்கனவே எங்களுக்குரிய பாகத்தை பெற்றுக்கொண்டு ஆவணங்கள் எழுதிக்கொடுத்துவிட்டதாலும் 2வது முறையாக அதே சொத்தில் பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் இறந்த கேசவனுக்கு கொடுக்கப்பட்ட 5/6 பாக சொத்தின் அளவும் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் அளவும் தவறு என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தில் எனக்கு பாகம் இல்லை என்றும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.